

# கண்ணா; லட்டு தின்ன ஆசையா?

**( திருப்பதி லட்டில் மாட்டுக் கொழுப்பு பன்றிக் கொழுப்பு...என வந்த செய்தி கேட்டு ஆசார அனுஷ்டானங்களை அனுசரிக்கும் குடும்பத்தில் நடந்த சம்பாஷனை - ஓர் கற்பனை )**

**மாமா:** அபச்சாரம்... அபச்சாரம்... பார்த்தியாடி அநியாயத்தை... லோகத்துல எதையுமே நம்ப முடியலியே...

**மாமி:** என்னன்னா சொல்றேள்...

**மாமா:** நீ ஒரு அபிஷ்டு... டி.வி.யைப் போட்டா... அதே நியூஸ்... பேப்பரைப் பார்த்தாலும் அதே நியூஸ்...

**மாமி:** எதைச் சொல்றேள். நம்ம பிரதமர் அடிக்கடி திரும்பவும் வெளிநாடு போறதையா... இல்லே... ஒரே நாடு... ஒரே தேர்தல் சமாச்சாரத்தையா...

**மாமா:** நோக்கு எதுவுமே மண்டையிலே ஏறாது... சேதி கேட்டதிலேயிருந்து எனக்குக் கொமட்டிண்டே வருது... எதையும் வாயிலே போடவே பயமாயிருக்கு... "ஓவ்... ஓவ்..." (வாந்தி எடுப்பது போன்ற சப்தம்)

**மாமி:** என்னாச்சுங்க... எதையாவது காலையிலே ஏடாகூடமா சாப்பிட்டுத் தொலைத்தேளா?


**மாமா:** காலையிலே சாப்பிடலேடி... போனதடவ பகவான் பெருமாளை தரிசிக்க திருப்பதி போனோமே...

**மாமி:** அதுவா... ஆஹா... என்ன திவ்யமான தரிசனம்... பெருமாள் என் கண்முன்னே இன்னமும் அப்படியே காட்சி தர்றாரு...

**மாமா:** ஏண்டி... நோக்கு என்ன புத்தி பேதலிச்சு போயிடுச்சா... நான் சொல்ல வந்தத காதுலே போட்டுக்காம... தத்து பித்துன்னு உளறிட்டிருக்கே...

**மாமி:** ஆமான்னா... திருப்பதின்னு சொன்னதும்... அப்ப தரிசித்த பெருமாள் அப்படியே காட்சிதர தொடங்கிட்டார்...

**மாமா:** பெருமாள் தரிசனத்துக்கு அப்புறம் ஆசையா ஏழுமலையான் சந்நிதியிலே லட்டு - வடைன்னு வாங்கினோமே...



**மாமி:** அய்யோ... அதை ஏன் இப்ப நினைவுபடுத்துறேள்... தேவாமிர்தமா இருந்துச்சு லட்டு... அதை நம்ம உறவுக்காராளுக்கெல்லாம் கொடுத்தேன்... அவா எத்தனை சந்தோஷப்பட்டா தெரியுமோ!...

**மாமா:** சந்தோஷப்பட்டிருப்பா... இப்ப வர்ற நியூசை எல்லாம் படிச்சுட்டு அவா அவா விரலை தொண்டைல நுழைய விட்டு வாந்தி எடுத்துண்டு இருப்பா...

**மாமி:** என்ன சொல்றேள்... எதுக்கு இப்படி விதண்டா வாதம் பேசிண்டிருக்கேள்...

**மாமா:** விதண்டாவாதம் இல்லேடி! சுத்த விபரம் கெட்டவளாயிருக்கியே... வந்திருக்கிற சேதியெல்லாம் நோக்கு எதுவும் தெரியாதா?

**மாமி:** என்ன அப்படிப்பட்ட சேதி!

**மாமா:** திருப்பதி ஏழுமலையான் கோவிலில் விநியோகம் செஞ்ச பெருமாள் பிரசாதமான லட்டுலே மாட்டுக் கொழுப்பு, பன்றிக் கொழுப்பு எல்லாம் கலந்திருந்ததாம்...

**மாமி:** என்னனங்க... இப்படி திடீர்னு தலையிலே இடியை போடுறேள்... நீங்க சொல்றேளே அது நிஜமா?

**மாமா:** சத்யவாக்கு... இப்ப ஹாட் நியூசே அதான்!

**மாமி:** என்ன சர்வ சாதாரணமா இதைச் சொல்றேள்...

**மாமா:** வேற என்ன செய்யச் சொல்றே... பகவான் சந்நிதியிலேயே இப்படிப்பட்ட அநியாயம் நடந்திருச்சு... அவாள அவரு சும்மாவிட்டுடுவாரா? அவா குடும்பம் விளங்குமா?

**மாமி:** அவாள பகவான் தண்டிக்கிறது அப்புறம் இருக்கட்டும்... அந்த லட்டை வாங்கி லட்சக்கணக்கான நம்மவா சாப்பிட்டுத் தொலைச்சிருக்காளே...

**மாமா: அயோத்தியிலே கோயில் கட்டி பாலராமரை நம்ம பிரதமர் மோடிஜி பிரதிஷ்டை செஞ்சாரே. அதுக்கு பல லட்சம் லட்டு, அதே திருப்பதியிலேயிருந்து போயிருந்திருச்சாம்...**




**மாமி:** இப்படி எல்லாரையும் பாவ காரியம் செய்ய வச்சுட்டாளே! இதுவரை அனுஷ்டித்த ஆச்சாரங்களெல்லாம் பாழாயிடுச்சே... என்ன நேரத்திலே இதைச் சொல்லித் தொலைச்சேளோ... வயிறு கடகடங்குது... (வாவ்... வாவ்... - என வாந்தி எடுக்க முயற்சிக்கிறார்) அப்போது அந்த வழியாக வந்த அம்பி, மாமி வாந்தி எடுக்க முயற்சிப்பதைக் கண்டு...

**அம்பி:** (கிண்டலாக) என்ன மாமி... இந்த வயசுல வாந்தி எடுக்கிறேள்...

**மாமி:** (கோபமாக) கட்டையில போறவனே... நாங்க இங்க வெந்து சுண்ணாம்பா கொதிச்சுண்டிருக்கோம்... நோக்கு கிண்டலா இருக்கா...

**அம்பி:** அய்யய்யோ... தப்பா நெனைச்சிக்கிடாதிங்கோ மாமி... நிலைமை தெரியாம சும்மா தமாஷா பேசினேன்... என்ன ஆயிடுச்சு மாமி.

**மாமா:** மண்டூகமே; நோக்கு எதுவும் தெரியாதா... கேள்விப்படவே இல்லையா? திருப்பதி லட்டு விஷயம் ஊரெல்லாம் சந்தி சிரிச்சிண்டிருக்கே...

**அம்பி:** ஓகோ... அந்த டென்ஷனில் இருக்கேளா? நீங்க அந்த லட்டை சாப்பிட்டேளா?

**மாமி:** நாங்க மட்டும் சாப்பிடலேடா... பகவான் ஷேத்திரத்திலிருந்து ஆசையா வாங்கிட்டு வந்து இஷ்டமித்ரா எல்லாருக்கும் கொடுத்து தொலைச்சுட்டோம்டா...

**மாமா:** (அம்பியிடம்) ஏண்டா அம்பி... ஊர்ல இத பத்தி என்ன பேசுறாள்...

**அம்பி: பலரும் பல விதமா பேசுறா... வடக்கே இந்துத்துவா வாதிங்க... மாட்டுக்கறி சாப்பிட்ட வாளை எல்லாம் இந்து விரோதின்னு கூறி அடிச்சு உதைக்கிறாளோ– இல்லையோ... இப்ப நாடு முழுவதும் மாட்டுக்கொழுப்பை – பன்னி கொழுப்பை எல்லாம் தின்னுருக்காளே அவாளை எல்லாம் இந்துத்துவா பேர்வழிகள் எங்கே கட்டி வைச்சு அடிப்பான்னு கேலி பேசுறா... சோசியல் மீடியாவில நம்மவா எல்லாரையும் வறுத்தெடுக்கிறா...**

**மாமா: செய்யமாட்டாளா என்ன; பி.ஜே.பி. ஆட்சிக்கு வந்ததும் நம்மவா ஆடுற ஆட்டத்தைக் கண்டு அந்த ஏழுமலையானுக்கே பொறுக்கல...**



**அம்பி:** அதான் திருப்பதி வெங்கடாஜலபதி இந்தக் கூட்டத்தை வச்சு செஞ்சிட்டாருன்னு பேசிண்டிருக்கா...

**மாமா:** யாராவது 'சுனா மானா' கட்சிக்காரா பேசியிருப்பா...

**அம்பி:** 'சுனா மானா' வா...? என்ன மாமா சொல்றேள்...

**மாமா:** அந்த காலத்துல ஈரோடு ராமசாமி நாயக்கர் கட்சியைத்தான் அப்படி சொல்லுவா...

**அம்பி:** பெரியாரைச் சொல்றேளா? அவர் கட்சி திராவிடர் கழகமாச்சே மாமா...

**மாமா:** நோக்கு அதெல்லாம் தெரியாதுடா... திராவிடக் கழகத்தின் கோஷங்களில் ஒன்று சுயமரியாதை... சுயமரியாதைக் கட்சியை கிண்டலடிக்க நம்மவா அப்ப 'காயின்' பண்ணுன வார்த்தைடா அது...

**அம்பி: மனிதனுக்கு சுயமரியாதை வேணுன்னு சொன்னதுல என்ன மாமா தப்பு... எதுக்காக அதை கிண்டலடிக்கணும்...**

**மாமா:** நோக்கு அதை எல்லாம் விலாவாரியாக சொல்ல முடியாது... இப்ப திருப்பதி லட்டுல மாட்டுக் கொழுப்பு இருந்துச்சுன்னு அந்த முதலமைச்சரே சொல்றாரு... இன்னும் சில பேரு அதை மறுக்கிறா?

**மாமி:** ஆமா.. நீங்க என்ன நெனைக்கிறேள்... அது நெஜமா இருக்குமா? நம்புறேளா?

**மாமா:** எப்படி நம்பாம இருக்க முடியும்... முதல் மந்திரியே சொல்றாரே!

**அம்பி:** பழைய முதலமைச்சர் அது பொய்; அதுல அரசியல் இருக்குன்னு சொல்றாரே...

**மாமா:** நம்ப நட்டா ஜியே ஆந்திர அரசிடம் அறிக்கை கேட்டுள்ளாரே! அதுவே என்னவோ இருக்குன்னுதானே காட்டுது...

கோமூத்ரம் கோமயம் சைவ க்ஷீரம் ஶ்ரீ ரீத ததா ।
பஞ்சராத்ரம் ததாஹார: பஞ்சகவ்யேன ஶுத்யதி ॥

**மாமி :** 'நெருப்பு இல்லாம புகையுமா'? ஏதோ நடந்திருக்கு.. நீங்க ஆச்சார அனுஷ்டானங்களைக் கரைச்சிக் குடிச்சவராயிற்றே இதுக்கு எதுவும் பரிகாரமே இல்லையா?

**மாமா:** இதுபோல இக்கட்டான சூழல் வந்தா என்ன பண்றதுங்கறதுக்கு நம்ம பெரியவா பல பரிகாரங்களைச் சொல்லியிருக்கா...

**மாமி:** அப்ப என்ன பரிகாரத்தை செஞ்சிடுவோம்... சொல்லுங்க...

**மாமா:** (சொல்லத் தயங்குகிறார்)

**அம்பி:** நேக்கு ஒரு பரிகாரம் தெரியும் மாமா; அதனை நான் எங்கேயோ படிச்சிருக்கேன்...

**மாமி:** அவர் சொல்ல பயப்படறா, நீயே சொல்லித் தொலையேண்டா...

**அம்பி:** இது தொடர்பா சமஸ்கிருத ஸ்லோகம் ஒன்றே இருக்கு...

**மாமா:** என்னன்னு விளக்கமா அந்த ஸ்லோகத்தை சொல்லேண்டா?...

**அம்பி:** இதை விளக்கமா சொல்றேன் கேட்டுக்குங்க...

**மாமி:** பீடிகை போடுவதை விட்டுட்டு அதை சீக்கிரம் சொல்லுடா... அம்பி.

**அம்பி: அசைவ உணவு ஒருவரை பாவத்திற்கு ஆளாக்குகிறது. சில காரணங்களால் அசைவ உணவை தவிர்க்க இயலாது சாப்பிட்டு விட்டால் பாவ பரிகாரமாக 'பஞ்ச கவ்யாவை' அருந்திட்டால் அந்தப் பாவம் நீங்கிடும் என்பது அந்த ஸ்லோகம்.**



**மாமி: பஞ்ச கவ்யாவா? அப்படின்னா.. என்ன; நான் கேள்விப்படலேயே...**

**அம்பி:** அதுபற்றி நான் படிச்ச ஸ்லோகத்தை சொல்றேன்...

**"கோமூத்ரம் கோமயம்**
**சைவ க்ஷீரம் ததா!**
**பஞ்சராத்ரம் ததாஹார்;**
**பஞ்ச கவ்யேன் ஶ்ரீத்யதி!**

**மாமி:** (மாமாவைப் பார்த்து) என்னன்னா உளறுறான் இவன்...

**மாமா:** அவன் உளறலேடி... அந்த ஸ்லோகத்தின் அர்த்தத்தைக் கேட்டுக்கோ; சொல்றேன்...

பசுவின் பால், பசுவின் சிறுநீர் பசுவின் சாணம், தயிர் மற்றும் நெய் ஆகியவற்றின் கலவைக்குப் பெயர் தான் **பஞ்ச கவ்யா!**

**அம்பி :** ஆமாம் மாமி; மாமா சரியா சொல்லிட்டார். மாமா சொன்ன இந்த கலவையை, அதாவது பசுவின் சிறுநீர், பசுவின் சாணம் உள்ளிட்ட அந்தக் கலவையை ஐந்து இரவுகளில் சாப்பிடுவதால் அசைவ உணவை உட்கொள்வதால் ஏற்படும் பாவம் நீங்கும்.

**மாமி:** ஏண்டா அம்பி நிஜத்தை சொல்றீயா?

**அம்பி:** நான் சொல்லலே மாமி... இந்து சமய நூல்கள் சொல்லுது மாமி, செய்யும் பாவங்களிலிருந்து மனிதனைக் காப்பாற்றி அவனை ஆன்மீகப் பாதையிலே இட்டுச் செல்ல இந்து சமய நூலில் சொல்லப்பட்டதுதான் இது!

**மாமி:** பஞ்சகவ்யாவுக்கு 'அந்த' லட்டே மேல்... பஞ்ச கவ்யாவை நெனைச்சாலே கொமட்டிண்டு வருது... ஆளை விடுங்கடா சாமி...